Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 306/2021 |
| Police station | : | Naduveerapattu P.s |
| Deposition of witness for Prosecution | : | LW 4 / PW 4 |
| Name | : | வேலு |
| Father Name/Husband Name | : | தனவேல் |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 19.12.2022 நாளாகிய இன்று திருமதி.L.வனஜா, B.A., B.L., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>:**

1. நான் தற்போது பண்ருட்டி தாலுக்கா புதுப்பாளையத்தில் வசித்து வருகிறேன். கடந்த 02.03.2020 ம் தேதி மாலை 4.30 மணியளவில் நானும், சந்திரசேகர் என்பவரும் நடுவீரப்பட்டிற்கு சி.என். பாளையம் வழியாக வந்துக்கொண்டிருந்தபோது, சிஎன் பாளையம் கால்நடை மருத்துவமனை அருகே போலிசார் அந்தயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அந்தயிடத்தில் விபத்து நடந்ததாக கூறினார்கள். எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்க சொல்லி கேட்டதன்பேரில் நானும், சந்திரசேகர் என்பவரும் அவர்கள் தயார் செய்த மகசரில் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். (**சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய பார்வை மகசர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

1. வழக்கின் விபத்து கால்நடை மருத்துவமனைக்கு எதிரே நடந்தது. என்னிடம் கையெழுத்து வாங்கி பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை, ஆனால் அதிலிருந்த விவரங்களை என்னிடம் ஆய்வாளர் சொன்னார்கள். சம்பவயிடத்தில் வைத்து தங்களிடம் கையொப்பம் பெறவில்லை காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து வாங்கினார் என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.